தமிழ்ப் பண்களுக்கு உரிய இராகங்கள்

[தொகுப்பு: *ஆகம நுண்பொருள் ஆய்வர் ஸ்வரணபுரி* R. ஸ்ரீதரன்]

1. சைவத் திருமுறைப் பாடல்களை இசைப்பது குறித்து

பண்கள் குறிப்பிடப்பட்டுள்ள திருமுறைப் பாடல்களை, அப்பண்களைக் கற்றுணர்ந்தவர் அவ்வாறே இசைப்பதே முறை. திருமுறைப் பாடல்களை அவற்றின் பண்களுக்கு ஒத்த கருநாடாக மரபு இராகங்களில் இசைப்பவர் பலர் உண்டு. அவர்கள் இசைக்கும் இராகங்களுக்கும் பண்களுக்கும் ஓர் ஒப்புமைப் பட்டியல் தயாரிக்க முளையும்போது, பல நூல்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. பாடுபவர்களும், ஒரே பண்ணைப் பல இராகங்களில் பாடி வருகின்றனர்.

அப்பர் பெருமானின் திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம், திருநேரிசை, திருவிருத்தம் ஆகிய நால்வகைப் பாடல்களுக்கும் பண்களோ, இராகங்களோ குறிப்பிடப்படாமலேயேதான் வெகுகாலமாகப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன. திருத்தாண்டகம் ஹரிகாம்போதீயிலும், திருவாசகம் மோகனத்திலும் பாடப்பட்டு வந்தாலும், புத்தகங்களில் அவ்வாறு வெளிப்படையாக அச்சிட்டுக் காணவில்லை. இவற்றின் காரணம் விளங்கவில்லை.

பண்கள், அவற்றைப் பாடவேண்டிய விதம் இவை குறித்த அறுதியான ஆராய்ச்சி முடிவுகள் தொகுக்கப்பட்டு சாமானியர்களுக்கெனப் புத்தகமாக வந்துள்ளதாகத் தெரியவில்லை. அறிஞர்கள் முன்வந்து சீர் செய்யும் நாள் வரை, தமிழ்ப்பாடல்களை இசைபோருக்கு உதவ, சில தமிழ்ப் பண்கள், நாவுக்கரசரின் நால்வகைப் பாடல்கள், திருஇசைப்பா, திருப்பல்லாண்டு. திருவாசகம், திருவெண்பா ஆகியவற்றிக்கான இராகங்களின் பட்டியலைப் பலர் தயாரித்துள்ளனர். அவர் வழி நடந்து, பல இடங்களித்தும் திரட்டி* அடியேனும் ஒரு பட்டியலைத் தொகுத்துள்ளேன். அதில் காணக்கூடிய பிழைகளுக்குத் தமிழறிஞர்கள் என்னை மன்னித்து, புதிய பதிப்புக்களில் அவற்றைச் சீர் செய்ய உதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திவ்ய ப்ரபந்த நூல்களில் பாடல்களின் பண்களுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள இராகங்கள், அதே பெயருள்ள பண்களுக்குத் திருமுறை நூல்களில் தரப்பட்டுள்ள இராகங்களிலிருந்து வேறாகக் காணப்படுகின்றன. அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள இராகங்களில் திவ்ய ப்ரபந்தப் பாடல்கள் தற்போழ்து இசைக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

* குறிப்பாக தணிகைமணி வ. சு. செங்கல்வராயப் பிள்ளை அவர்களின் ***சம்பந்தர் தேவார ஒளி நெறி*** கடலூர் திரு. தி. கி. நாராயணசாமி முதலியார் அவர்களின் ***தேவாரத் திருமுறை அமைப்பு*** ஆகிய நூல்களைப் பெரும்பாலும் தழுவியும் ***தெய்வத் தமிழ்*** என்ற பிரசுரத்தில் காணப்படும் குறிப்புக்களை அனுசரித்தும் இந்தத் தொகுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்கள் வேண்டுவோர்க்கென, ***தேவாரத் திருமுறை அமைப்பு*** என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில கட்டுரைகள் (1) ***சித்தாந்தம்*** 1952 அக்டோபர் இதழில் திரு பொன் ஓதுவார் அவர்கள் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை (2) 1951-இல் காரைக்குடி திரு அ. நடேச தேசிகர் அவர்கள் வெளியிட்ட ***தேவாரப் பண்முறைக் கட்டளை*** (3) புதுவை திரு விநாயக முதலியார் அவர்கள் வெளியிட்ட ***தேவாரப் பண் தர அமைப்பு*** (4) சென்னை, தமிழிசைச் சங்கம் அவ்வப்போது வெளியிட்டு வரும் ***பண் ஆராய்ச்சி*** அறிக்கைகள் (5) சுவாமி விபுலானந்தர் எழுதிய ***யாழ் நூல்*** (6) ***பஞ்ச மரபு***.

2. பண்கள் / பாக்கள் - இராகங்கள் ஓர் ஒப்புமைப் பட்டியல்…

பண்கள்	இராகங்கள்
1. அந்தாளிக்குறிஞ்சி	சாமா
2. இந்தளம்	நாதநாமக்ரியா, மாயாமாளவகௌளை
3. காந்தாரி பஞ்சமம்	கேதார கௌளை
4. காந்தாரம்	நவரோஸ்
5. குறிஞ்சி	ஆரபி, குறிஞ்சி, சுருட்டி, யதுகுலகாம்போதி, ஹரிகாம்போதி
6. கொல்லி	நவரோஸ்
7. கொல்லிக்கௌவாணம்	நவரோஸ்
8. கௌசிகம்	பைரவி
9. சாதாரி	பந்துவராளி (காமவர்த்தினி)
10. சீகாமரம்	நாதநாமக்ரியா, மாயாமாளவகௌளை
11. செந்துருத்தி (செந்திறம்)	மத்யமாவதி, ஸ்ரீராகம்
12. செவ்வழி	யதுகுலகாம்போதி
13. தக்கராகம்	காம்போதி
14. தக்கேசி	காம்போதி
15. நட்டபாடை	நாட்டை
16. நட்டராகம்	பந்துவராளி
17. நைவளம்	நாட்டை
18. பஞ்சமம்	ஆகிரி
19. பழந்தக்கராகம்	ஆரபி, சுத்தசாவேரி
20. பழம்பஞ்சரம்	சங்கராபரணம், பைரவி
21. பியந்தைக் காந்தாரம்	நவரோஸ்
22. புறநீர்மை (நேர்திறம்)	பூபாளம், பௌளி

23. மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி
24. யாழ்முரி	அடாணா
25. வியாழக்குறிஞ்சி	ஸெளராஷ்ட்ரம்

பாக்கள்	இராகங்கள்
1. திருஇசைப்பா	பஞ்சமப் பண் ஆகிரி, இந்தோளம்
2. திருக்குறுந்தொகை	நாதநாமக்கிரியா, தன்யாசி, பைரவி, பூர்விகல்யாணி, சாவேரி
3. திருத்தாண்டகம்	ஹரிகாம்போதி
4. திருநேரிசை	நவரோஸ் (ஸாமா)
5. திருப்பல்லாண்டு	ஆகிரி, சுருட்டி
6. திருவாசகம்	மோகனம்
7. திருவிருத்தம்	பைரவி, சங்கராபரணம், (ஒத்த ராகங்கள்)
8. திருவெண்பா	சங்கராபரணம், (காந்தாரம், நட்டராகம்)

3. தற்போது வழக்கில் உள்ள பண்கள் குறித்து

“தேவாரப் பண்கள் ரக்தி ராகத்தில் அமைந்துள்ளன. ஆதலால் அந்த ராகபாவங்களை அறிவதற்கு முத்துசாமி தீக்ஷிதருடைய கீர்த்தனங்களைக் கீழ்வேளூர் சொக்கலிங்க தேசிகர் கற்றனர். பிறகு ராக பாவங்கள் புலப்படும்படி தேவாரங்களைப் பாடிப் பல பாடசாலைகள் அமைத்துக் கற்பித்து வந்தனர். தேவார கோஷ்டிகள் இப்போது பாடி வரும் மரபுகள் எல்லாம் அவர் கற்பித்தனவே என்கிறார் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள், தன்னுடைய நல்லுரைக் கோவை 11, பக்கம் 121-இல். இவற்றால், பண்முறையில் பாடும் பரம்பரை பல ஆண்டுகளுக்கு முன்பே அற்றுப் போய்விட்டாமை புலனாகும்”. *தேவாரத் திருமுறை அமைப்பு.*

4. பாடல்களைப் சந்தி பிரித்துப் பாடுவதைக் குறித்து

“தேவாரம் திவ்ய ப்ரபந்தம் முதலிய இயல் இசைப் பாடல்களைப் பாடுவோர்க்குச் சந்தி பிரித்தல் தடையாம் எனக் கருதுவோரும் உண்டு. - நாலாயிரப் திவ்யப் பிரபந்தத்தைச் சந்தைச் சொல்லும் பழக்கம் இப்பொழுதும் இருந்து வருகிறது. சந்தை சொல்வோர் பொருள் மனத்தில் பதியும் முறையில் இரண்டு மூன்று சொற்களாகச் சேர்த்துக் கூறி வருகின்றனர். அவர்கள் பதங்களைப் பிரித்தே ஓதுகின்றனர். எனவே பாடல்களை இசையுடன் பாடும் முறைக்கும் இசையின்றி ஓதும் முறைக்கும் வேறுபாடுள்ளமை தெரியலாம். பொருள் உணர்ச்சியோடு இலக்கிய நயம் உணர்ந்து கற்பதற்குச் சந்தி பிரித்தல் மிக அவசியம் என்பது இதனாலும் விளங்கும். சந்தி பிரிப்பதிலுள்ள ஒரு குறைபாடு, செய்யுளின் ஓசை

இன்பம் சில இடங்களில் தடைபடுவதே. பொருளைப் புரிந்து கொண்ட பிறகு, செய்யுட்களை மீண்டும் மீண்டும் படிக்கும்போது, சந்தி தானே இணைந்து, இயல்பான ஓசையின்பம் பெரும்பாலும் அமைந்துவிடும்".